அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்வதாகத் தாங்கள் வாக்களித்திருக்கிறீர்கள். நேற்றைய தினம் வரவில்லை. நேற்றைய தினம் கேட்டதற்கு இன்றைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என்று சொன்னீர்கள். அது உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அமைச்சர் அவர்கள் இன்றைக்கே அறிக்கை தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நேற்றுச் சொன்னீர்கள், இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்களுடைய பிரச்சினை என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அமைச்சர் தயார் என்றால் நானும் எடுத்துக்கொள்ளத் தயார். ஆனால் என்னிடம் அந்த அறிக்கை வரவில்லை. அந்த அறிக்கை வராமல் அதை அவையில் எடுத்துக் கொள்ள எப்படி நான் அனுமதிக்க முடியும்? அமைச்சர் தயார் என்றால் இப்போது கூட எடுத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் எடுத்துக் கொள்ளத் தயார்.

திரு. க. அன்பழகன்: நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அந்த முறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்கிறார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.